செ.வெ.எண்: 980/2017 நாள்: 20.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**தோட்டமலை மற்றும் மாராமலை பழங்குடியின மக்கள் குடியிருப்பு பகுதிகளில் ஒகி புயல் சேத சீரமைப்பு பணிகள் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட தோட்டமலை மற்றும் மாராமலை பழங்குடியின மக்கள் குடியிருப்பு பகுதிகளில் ஒகி புயலால் சேதமடைந்த மரங்கள், சேதமடைந்த வீடுகள், சேதமடைந்த சாலைகள் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளையும், சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.12.2017) அலுவலர்களுடன் படகில் சென்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்ததோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.

ஒகி புயல் சேத சீரமைப்பு பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தபின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் அனைத்து பகுதிகளும் குறிப்பாக மலைவாழ் மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக சேதமடைந்துள்ளது. தோட்டமலையில் உள்ள 48 வீடுகளில் 5 வீடுகளும், மாராமலை பகுதியில் உள்ள 22 வீடுகளில் 10 வீடுகளும் முழுமையாகவும், மீதமுள்ள வீடுகள் பகுதியாகவும் சேதம் அடைந்துள்ளது. பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான நிவாரணத்தொகை அவர்களது வங்கிக்கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. தச்சன்மலையில் 65 மின்மாற்றிகள் சேதமடைந்து மின்வசதி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 25 மின்மாற்றிகள் புதிதாக நிறுவப்பட்டுள்ளது. மீதமுள்ள மின்மாற்றிகள் மற்றும் மின்வசதிகள் சீரமைக்கும் பணி மின்துறை வாயிலாக அருகில் உள்ள மாவட்டங்களிலிருந்து வரப்பெற்ற மின் பணியாளர்களுடன் இணைந்து போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மலைவாழ் மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் பயிர்கள் முழுமையாக சேதமடைந்துள்ளதால், வாழ்வாதாரம் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்கள் எவ்வித தொழிலும் உடனடியாக செய்ய இயலாத நிலையை கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வாழ்வாதார நிவாரணதொகையாக குடும்பம் ஒன்றிற்கு தலா ரூ.5 ஆயிரம் நிதி உதவி வழங்க உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் குமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மலைவாழ் மக்களின் குடும்பத்திற்கும் அவர்களது வங்கி கணக்கில் நிவாரண உதவி விரைவில் செலுத்தப்படவுள்ளது. அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்வகையில், 100 நாள் வேலைதிட்டத்தின் வாயிலாக அப்பகுதியில் முழுமையாக சேதமடைந்த சாலை வசதியினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தச்சமலைப்பகுதிகளில் சேதமடைந்த மரங்களை அவர்களே அகற்றிடும் வகையில் மரம் அறுக்கும் இயந்திரம் அவர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. குடிநீர் பற்றாகுறையினை முழுமையாக மேம்படுத்தும்வகையில் திட்ட அறிக்கை தயாரிக்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சேதமடைந்த மின் மாற்றிகளை அகற்றி, புதியதாக மின்மாற்றிகள் மூலம் மின்சாரம் விரைவில் வழங்கப்படும். வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சேதமடைந்ததை வருவாய்த்துறை அலுவலர்கள், தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் இணைந்து கணக்கெடுக்கும் பணியினை உடனடியாக மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், தோட்டமலை பகுதியில் உள்ள தொடக்கப்பள்ளியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை ஆய்வு செய்தார்கள். அப்பகுதியிலுள்ள மலைவாழ் மக்களிடம் குறைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அப்பகுதி மக்களுக்கான ஸ்மாட் கார்டுகளையும் வழங்கினார். பள்ளி சத்துணவு கூடத்தில் சமைக்கப்பட்டுள்ள உணவுகளையும் ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது, பத்மநாபபுரம் சார் ஆட்சியர் திரு. இராஜகோபால் சுன்கரா இ.ஆ.ப., உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. சையத்சுலைமான், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**